10,000 கோடி ரூபாய் செலவில், 8 வழிச் சாலை அமைத்து பாதுகாப்பாகச் செல்ல வேண்டுமென்று நினைக்கின்ற இந்த அரசு, கிராமப்புறங்களில் உள்ள ஏழையெளிய மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் பாதுகாப்பாகச் செல்வதற்கு ஆவன செய்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வழித்தடத்திலே பள்ளிக் குழந்தைகளுக்கு பேருந்து வசதி இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் அதை எழுத்து மூலமாகக் கொடுத்தால், உண்மையிலேயே பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு பேருந்து வசதி இல்லாமல் இருந்தால், அவர்களுக்குப் பேருந்து வசதி செய்து கொடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, வழிவகை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

239—

குடமுழுக்கு

***5602—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூரிலுள்ள அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

2018 ஜூன் 28]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்கி, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.*

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைப்புச் செய்து திருப்பணிகளை நடத்திட, Regional Screening Committee *மற்றும் மாண்புமிகு உயர் நீதிமன்றக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. *கலைச்செல்வன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

240—

உள்விளையாட்டு அரங்கம்

***21008—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் நவீன உள்விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS